# இலங்கை தூர சேவைகளில் ஈடுபடுத்தப்படும் அரைச் சொகுசு பேருந்து சேவை




அறிக்கை இலக்கம் : பீஈஆர் /எஸ்எஸ்பீ/**2017/01**

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

செயலாற்றல் பிரிவு

**உள்ளடக்கம்**


| | | | |
|---|---|---|---|
| 01. | | நிறைவேற்றுப் பொழிப்பு | 1 |
| 02. | | அறிமுகம் | |
| | 2.1 | பின்னணி | 3 |
| | 2.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 5 |
| | 2.3 | கணக்காய்விற்கான தலைப்பினை தெரிவுசெய்தல் | 5 |
| | 2.4 | கணக்காய்வு அணுகுமுறை | 5 |
| | 2.5 | கணக்காய்வின் நோக்கம் | 6 |
| | 2.6 | கணக்காய்வு விடயப் பரப்பு | 6 |
| 03. | | விரிவான கணக்காய்வு அவதானிப்புக்களும் நிறுவனத்தின் கருத்துரைகளும் | |
| | 3.1 | அரைச் சொகுசு பேரூந்துகளுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | 7 |
| | 3.2 | நடமாடும் பரிசோதனை பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனை | 7 |
| | 3.3 | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஓட்டத்தில் ஈடுபடும் தனியார் பேரூந்துகள் | 8 |
| | 3.4 | பொதுமக்கள் முறைப்பாடு | 10 |
| | 3.5 | பொதுமக்கள் தனியார் போக்குவரத்து சேவைக்கு நுழைதல் | 11 |
| | 3.6 | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை புறக்கணிக்கும் சந்தர்ப்பங்களில் நிர்வாகக் கட்டணங்களை அறவிடுதல் | 13 |
| | 3.7 | சட்டங்கள், விதிகள் இலகுபடுத்தல் | 14 |
| | 3.8 | GPS தொழில்நுட்பத்துடனான பேரூந்துகளை கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தல | 16 |
| | 3.9 | பேரூந்துகளின் பௌதீக பரிசோதனை | 17 |
| | 3.10 | ஒன்றிணைணந்த கால அட்டவணையை தயாரித்தல் | 19 |
| 04. | | பரிந்துரை | 20 |
| 05. | | தீர்மானம் | **23** |

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி இலக்கை அடையும் போது பொதுப் போக்குவரத்து மிகவும் முக்கிய துறையொன்றாக இருப்பதால் அத்துறை தரமானதாகவும், செயற்திறனுடையதாகவும் பாதுகாப்பானதாகவும் செயற்படுத்தப்பட வேண்டும். இலங்கையின் செயற்திறனான பேரூந்து சேவையொன்றை செயற்படுத்துவது தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை போக்குவரத்து சபை என்பவற்றின் கடமை பொறுப்பாக உள்ளது. அதற்காக செயற்படுத்தப்படும் பேரூந்து சேவையொன்றான அரைச் சொகுசு பேரூந்து சேவையின் நோக்கம் சாதாரண பேருந்து கட்டணத்தின் ஒன்றரை மடங்கு (1.5) பேருந்து கட்டணமொன்றை அறவிட்டு ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் பிரயாணிகளை கொண்டு செல்லல், பிரயாணிகளுக்கு வசதியான முறையில் பிரயாணம் செய்யக்கூடியதாக இருத்தல் மற்றும் அனுமதிக்கப்பட்ட பேருந்து தரிப்பிடங்களில் மாத்திரம் நிறுத்துதல் போன்ற நிபந்தனைகளை கடைப்பிடித்து தூர சேவை பிரயாணிகளுக்கு வசதியாக பிரயாணத்தின் இறுதியை நோக்கி செல்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் நடாத்தப்படும் அரைச் சொகுசு பேரூந்து சேவையிலிருந்து பயணிகளுக்கு செயற்திறனான மற்றும் ஆக்கபூர்வமான சேவையொன்று நடைபெறுகின்றதா என்பதை மதிப்பீடு செய்வதே கணக்காய்வின் நோக்கமாகும். 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளதுடன் தனியார் பேரூந்து சேவை அதன் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. அனைத்து மாகாண அரைச் சொகுசு தனியார் பேரூந்துகளுக்கு அதற்கான சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறினால் அந்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய முடியும். மீறும் தன்மையின் பிரகாரம் நிர்வாகக் கட்டணங்கள் அறவிட முடியுமான போதிலும், மேற்கூறிய சட்டத்தில் அதற்குரிய ஏற்பாடுகள் இல்லையென அவதானிக்கப்பட்டது. பொது மக்கள் முறைப்பாடுகளை பரீட்சித்த போது அரை சொகுசு சேவை பேரூந்துகள் மூலம் எதிர்பார்க்கப்படும் பண்புகள் போதியளவில் கிடைக்கவில்லையென கண்டறியப்பட்டது. அவ்வாறே அனுமதிக்கப்பட்ட பேருந்து தரிப்பிடங்களுக்கு மேலதிகமாக வேறு பேருந்து தரிப்பிடங்களில் பேரூந்துகளை நிறுத்துதல், ஆசனங்களின் அளவினை மிகைத்து பயணிகளை ஏற்றிச் சென்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை, அத்தவறுகள் தொடர்பான நடவடிக்கைகளை

எடுப்பதற்கு காலதாமதம் காணப்படல் மற்றும் செல்லுபடியான அனுமதிப்பத்திரம் ஒன்றில்லாமல் பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுவதும் அவதானிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களுக்குள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ள பொதுமக்கள் முறைப்பாடுகளில் 47 சதவீதம் அரைச் சொகுசு பேரூந்துகளுடன் தொடர்புடையதாகும். கணக்காய்வினால் 08 அரைச் சொகுசு பேரூந்துகளில் 142 பிரயாணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் 51 பிரயாணிகள் அரை சொகுசு பேருந்தென தெரியாமல் பல பேரூந்துகளில் ஏறியிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

அனைத்து மாகாண பேரூந்துகளுக்காக உலகளாவிய இடத்தை முறையொன்று (GPS) அறிமுகப்படுத்தப்பட்டு அது 448 அரை சொகுசு பேரூந்துகளில் 08 பேரூந்துகளுக்கு மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் தனியார் வாகனங்களின் அதிகரிப்பு 67 சதவீதமாக இருந்த போதிலும் பொதுப் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் பேரூந்துகளின் அதிகரிப்பு 16 சதவீதமாக இருந்தது.

அரை சொகுசு பேரூந்து சேவையில் ஈடுபடும் தனியார் பேரூந்துகள் மூலம் இடம்பெறும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மீறுவதை தவிர்ப்பதற்காக தனியார் பேரூந்து உரிமையாளர்களின் தண்டப்பணக் கட்டணத்தை அறவிடுவது தொடர்பாக ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் செல்லுபடியான பயணிகள் அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் அரைச் சொகுசு பேரூந்து சேவையில் ஈடுபட்டுள்ள பேரூந்துகள் தொடர்பாக தேவையான சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் அத்தியவாசியமானதென பரிந்துரைக்கப்படுகின்றது. அவ்வாறே அரைச் சொகுசு பேரூந்து சேவை செயற்திறனான மற்றும் தரமான பேரூந்து சேவையொன்றாக மாற்றுவதற்காக அப்பேரூந்து சேவையின் பேரூந்தினை ஓட்டத்தில் ஈடுபடுத்தும் போது பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் செயற்படுத்துகின்றனரா என்பது தொடர்பாக முறையாக கண்காணிப்பிற்கு உட்படுத்தல், அந்நிபந்தனைகள் தொடர்பாகவும் அவற்றை பின்பற்றுவதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் நிபந்தனைகளை மீறும் பேரூந்து உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் ஆகியோருக்கு அறிவூட்டுதல் நிபந்தனைகளை மீறுவோர் தொடர்பாக துரிதமாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல், நடமாடும் பரிசோதனை சேவையின் பரிசோதனை நடவடிக்கைகளை விரிவாக்குதல், ஒன்றிணைக்கப்பட்ட நேரஅட்டவணையின் பிரகாரம் பேரூந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் என்பன பரிந்துரைக்கப்படுகின்றன.

## 2. அறிமுகம்

### 2.1 பின்னணி

போக்குவரத்து ஊடகங்களுக்கு இடையே உயர்ந்த பங்களிப்பினை வழங்கும் தனியார் பேரூந்து சேவையை முகாமைப்படுத்துவதற்காக 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் பொது பயணிகள் போக்குவரத்து பேரூந்து சேவைகளுக்காக சட்டரீதியான செயற்பாடுகளை தயாரித்து மொத்த இலங்கை பயணிகள் சமூகத்தின் போக்குவரத்து தேவைப்பாட்டை முறையாக வழங்கும் நோக்கில் வெவ்வேறு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அதற்கு இடையே அரை சொகுசு பேரூந்து சேவையை அறிமுகப்படுத்தியதும் ஒரு சந்தர்ப்பமாக இருந்தது. 2017 மே 16 ஆந் திகதிய மற்றும் தே.போ.ஆ/ஒ/பொது/35 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவரின் கடிதத்தின் பிரகாரம் சாதாரண பேருந்து கட்டணத்தின் ஒன்றரை மடங்கு (1.5) கட்டணமொன்று அறவிடப்படுவதாகவும் ஏனைய பயணிகள் பேரூந்து சேவைகளுக்கு இடையே இந்த பேரூந்து சேவையில் விசேட வேறுபாடுகள் சில ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. அவையாவன.

- மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில் மாத்திரம் இப் பேரூந்துகளை மாத்திரம் நிறுத்துதல்.
- பேரூந்துகளின் கண்ணாடிகளுக்காக திரைசீலை இடல்.
- ஆசனங்கள் அளவிற்கு மாத்திரம் பிரயாணிகள் ஏற்றுதல்.
- பேரூந்து சேவையை இலகுவாக அறிந்து கொள்வதற்கோ நீல பயண பெயர்களுடைய பதாதை வழங்குதல்

அனைத்து மாகாண தனியார் பயணிகள் பேரூந்து போக்குவரத்து சேவையின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன் அரச துறைக்குரிய பேரூந்துகளின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் இலங்கை போக்குவரத்து சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கை போக்குவரத்து சபையின் மூலம் அரைச் சொகுசு பேரூந்து சேவையில்

காணப்பட வேண்டிய குணாதிசயங்கள் தொடர்பாக விபரம் 2016 சனவரி 12 ஆந் திகதிய 2016/1 ஆம் இலக்க இயக்க சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இந்த இரண்டு நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் மற்றும் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் ஆகிய முகவர் நிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைத்திருந்தன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட 2016 ஆம் அண்டின் தேசிய போக்குவரத்து புள்ளி விபர அறிக்கையில் 2016 தரவுகளின் பிரகாரம் இலங்கை மொத்த வீதி வலையமைப்பு 31,280 கிலோமீற்றர் அளவில் இருந்ததுடன் அது தேசிய பெருந்தெருக்கள் (A மற்றும் B வகுப்புக்கள்) மற்றும் மாகாண வீதிகள் (C, D மற்றும் E வகை வீதிகள்) உள்ளூராட்சி அதிகாரசபைக்குரிய வகைப்படுத்தலின் எடுக்கப்படாத வீதிகளை கொண்டிருந்தன. அவ்வாறே அந்த தரவுகளின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டளவில் இலங்கை போக்குவரத்து சபையிடமிருந்த மொத்த பேரூந்துகளின் எண்ணிக்கை 8,046 ஆக இருந்ததுடன், அதில் 4 வீதிகளில் மாத்திரம் அரைச் சொகுசு பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற அனைத்து மாகாண தனியார் பேரூந்துகளின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டின் போது 3,118 ஆக இருந்ததுடன் அதில் அரை சொகுசு பேரூந்துகளின் எண்ணிக்கை 448 ஆக இருந்தது.

2017 ஆம் ஆண்டளவில் அரைச் சொகுசு பேரூந்துகளாக தனியார் துறையின் 450 பேரூந்துகள் 108 நகரங்களுக்கிடையே போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததுடன் 4 வீதிகளில் இப்பேரூந்து சேவை நடாத்தப்பட்டு வருகின்றது. அவ்வீதிகளின் பெயர், கொழும்பு - ஹட்டன், கொழும்பு – பதுளை, கொழும்பு – வவுனியா மற்றும் கொழும்பு – யாழ்ப்பாணம் ஆகிய வீதிகளாகும்.

08 ஆண்டு காலப்பகுதியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் அனைத்து மாகாண தனியார் பேரூந்து ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

அனைத்து மாகாண தனியார் பேரூந்து ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட முறை

| பேரூந்து வகை | ஆண்டு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| அதி சொகுசு | 4 | 5 | 6 | 23 | 46 | 51 | 40 | 96 |
| சொகுசு | 793 | 690 | 667 | 667 | 643 | 624 | 593 | 525 |
| அரைச் சொகுசு | 324 | 299 | 321 | 438 | 479 | 484 | 463 | 448 |
| சாதாரண பேரூந்துகள் சேவை | 2115 | 1989 | 1972 | 2048 | 2059 | 2071 | 2052 | 2049 |

மூலம் - தேசிய போக்குவரத்து ஆணைக்குழு - தேசிய போக்குவரத்து புள்ளிவிபரவியல் அறிக்கை 2016

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் காணப்படும் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.3 கணக்காய்விற்கான தலைப்பினை தெரிவுசெய்தல்

பயணிகளுக்கு தேவையான பிரகாரம் சேவைகள் கிடைக்கவில்லையென அவ்வவ்போது வெவ்வேறு ஊடகங்கள் மூலமாக அறிக்கையிடப்பட்டதன் காரணமாக அரைச் சொகுசு பேரூந்து சேவைகளிலிருந்து பயணிகளுக்கு தேவையின் பிரகாரம் சேவைகள் கிடைத்ததா என்பது தொடர்பாக மதிப்பிடும் பொருட்டு இத்தலைப்பு தெரிவு செய்யப்பட்டது.

## 2.4 கணக்காய்வு அணுகுமுறை

பேரூந்து வண்டிகளை கண்காணிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள GPS பிரிவு மற்றும் பொதுமக்கள் முறைப்பாட்டு பிரிவு என்பன பரீட்சிக்கப்பட்டதுடன் தேசிய சபையின் முகாமைத்துவ தீர்மானங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. 3 வருடங்களில் நடமாடும் பரிசோதனை அறிக்கைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன்

அவ்வருடங்களில் முதல் காலாண்டில் ஆசனங்களின் அளவினை மிகைத்து பயணிகளை எடுத்துச் சென்ற சந்தர்ப்பங்கள் மேலும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அவ்வாறே அரை சொகுசு பேரூந்து வண்டிகளில் பிரயாணம் செய்த பயணிகளின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அனுராதபுரம் போன்ற பேரூந்து சேவைகள் செயற்படுத்தப்பட்ட கொழும்பு – புத்தளம் வீதி மற்றும் கொழும்பு – பதுளை வீதி என்பன தெரிவு செய்யப்பட்டதுடன் தயாரிக்கப்பட்ட வினாக் கொத்துக்கள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

## 2.5 கணக்காய்வின் நோக்கம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் காணப்படும் அரைச் சொகுசு பேரூந்து சேவையிலிருந்து பயணிகள் சமூகத்திற்கு செயற்திறனான மற்றும் ஆக்கபூர்மான சேவையொன்றை நிறைவேற்றுகின்றதா தொடர்பாக மதிப்பிடல்.

## 2.6 கணக்காய்வு விடயப் பரப்பு

என்னால் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 3000-3200) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் கணக்காய்வு விடயப்பரப்பு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அரைச் சொகுசு பேரூந்து சேவைகள் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவை தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடமிருந்த தகவல்கள் கணக்காய்விற்காக பயன்படுத்தப்பட்டன.

இலங்கை போக்குவரத்து சபையினால் நான்கு வீதிகளில் மாத்திரம் அரைச் சொகுசு பேரூந்து சேவைகள் நடாத்திச் செல்லப்படுவதால் எமது விடயப்பரப்பிற்கு அந்நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற சேவை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. விரிவான கணக்காய்வு அவதானிப்புக்களும் நிறுவனத்தின் கருத்துரைகளும்

### 3.1 அரைச் சொகுசு பேரூந்துகளுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 1991 இன் 37 ஆம் இலக்க சட்டத்தினால் தேசிய தாபிக்கப்பட்டுள்ளன. 1991 முதல் 1994 ஆம் ஆண்டு வரை இலங்கை போக்குவரத்து சபையின் பதவியணியினரை ஈடுபடுத்தி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் விநியோகத்தை ஆரம்பித்திருந்தது. இவ்வாண்டிற்கு முன்பிருந்து இலங்கை போக்குவரத்து சபையினால் அரை சொகுசு பேரூந்து சேவைக்காக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அரை சொகுசு பேரூந்து சேவை ஏனைய பேரூந்து சேவைகளிலிருந்து வேறுபடுவது தொடர்பாக அடிப்படையிலான எழுத்து மூல அங்கீகாரமொன்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.2 நடமாடும் பரிசோதனை பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனை

1991 இன் இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களின் பிரகாரம் அனைத்து மாகாண பயணிகள் போக்குவரத்து தனியார் பேரூந்துகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வந்ததுடன் பயணிகளுக்கு தரமான பேரூந்து சேவையொன்றை வழங்குவதற்காக அந்த அனுமதிப்பத்திரத்தின் கீழ் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பேரூந்துகளுக்காக நிபந்தனை கோவையொன்று உருவாக்கப்பட்டிருந்தது. அந்நிபந்தனைகள் பின்பற்றப்படுகின்றதா என்பது தொடர்பாக பரீட்சித்தல் நடமாடும் பிரசோதனை பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றதுடன் அப்பரிசோதனைகளின் போது பேரூந்தொன்று அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறி அனைத்து மாகாண வீதிகளின் ஓட்டத்தில் ஈடுபடுத்தும் போது அப்பேரூந்துகள் தொடர்பாக புலனாய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் இப்பிரிவின் கடமையாகும். அப்பிரிவு வழங்கும் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிபந்தனைகளை மீறும் சாரதிகள் மாற்று நடத்துனர்கள் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

3.2.1 ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை போக்குவரத்துச் செய்வதை அதைரியப்படுத்துவது தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால்

பேரூந்து உரிமையாளர்களிடமிருந்து நிர்வாக கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்த போதிலும் 08 பேரூந்துகளிலும் ஒரே தவறு மீண்டும் மீண்டும் பல தடவைகளில் மேற்கொள்ளப்பட்ட 28 சந்தர்ப்பங்கள் 2015 ஆம் ஆண்டின் போது அவதானிக்கப்பட்டது.

3.2.2 தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டுள்ள 2015/8/20 iii ஆம் இலக்க முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் மேற்குறித்த தவறு 3 சந்தர்ப்பங்களிலும் மேற்கொள்ளப்பட்ட போது அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு தவறு செய்த பேரூந்தினை சாதாரண பேரூந்து சேவைக்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் அவ்வாறு செய்யப்படாமை காரணமாக நான்காவது மற்றும் ஐந்தாவது சந்தர்ப்பங்கள் வரை மீண்டும் அத்தவறுகளை செய்த 3 பேரூந்துகள் நடமாடும் பரிசோதனை மூலம் இனங்காணப்பட்டிருந்தன.

3.2.3 நடமாடும் பரிசோதனை பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளில் கண்டறியப்பட்ட தவறுகள் தொடர்பாக பரிசோதனைகளுக்கு சமூகமளிப்பதற்காக சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் வருகை தர வேண்டிய திகதி நடமாடும் பரிசோதனை உத்தியோகத்தர்களால் தீர்மானிக்கப்படுகின்றதுடன் அவர்கள் குறித்துறைத்த திகதியில் வருகை தராத சந்தர்ப்பங்களிலும் அத்தவறு தொடர்பாக இறுதி தீர்மானம் எடுத்தலில் தாமதம் அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டின் சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் 2 மாதங்கள் முதல் 11 மாதங்கள் வரையான அவ்வாறான 48 தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.3 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஓட்டத்தில் ஈடுபடும் தனியார் பேரூந்துகள்

அரைச் சொகுசு பேரூந்துகளில் பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரங்கள் உள்ள நிபந்தனைகளை மீறப்படுவதற்காக பேரூந்து உரிமையாளர்களிடமிருந்து நிர்வாகக் கட்டணங்கள் அறவிடுவது தொடர்பாக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களின் போது பெற்றுக்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட விடயங்களை கருத்திற்கொள்ளும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.3.1 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கையில் பயணிகள் போக்குவரத்தில் பயணிகள் ஈடுபட்டிருந்தமை

2017 சனவரி 30 ஆந் திகதி NTC 13931 ஆம் இலக்க அனுமதிப்பத்திரத்தை உடைய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அந்த அனுமதிப்பத்திரம் நாளதுவரையாக்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட திகதி அதாவது 2017 சனவரி 30 ஆந் திகதி முதல் 2018 மார்ச் 20 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 12 நாட்கள் செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்துவது உட்பட தவறு செய்த 39 சந்தர்ப்பங்கள் உள்ளதாக நடமாடும் பரிசோதனை அறிக்கை குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆதலால், இப்பேருந்து ஆணைக்குழுவின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படாமல் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### 3.3.2 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்திய காரணமாக நீதிமன்ற செயற்பாடுகளை எடுத்தல்

கணக்காய்வினால் பெற்றுக்கொண்ட மாதிரியில் உள்ளடக்கப்பட்ட மேற்படி 3.3.1 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பேரூந்து உட்பட 08 பேரூந்து பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தியதன் காரணமாக நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.3.3 அமைச்சிற்கு மேன்முறையீடுகளை சமர்ப்பித்துள்ள பேரூந்துகள்

ஒரே உரிமையாளருக்கு உரித்தான 2 பேரூந்துகள் தொடர்பாக 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை மேற்கொண்ட நிபந்தனைகளை மீறியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,711,750 நிர்வாகக் கட்டணங்கள் கொடுப்பனவு செய்ய முடியாதெனக் குறிப்பிட்டு போக்குவரத்து மற்றும் சிவில் சேவை அமைச்சு செயலாளருக்கு மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மேற்படி நிர்வாகக் கட்டணங்கள் தவணை அடிப்படையில் கொடுப்பனவு செய்தல் என்பதற்கு உட்பட்டு அந்த 2 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை நாளதுவரையாவதற்கு 2018 சனவரி 25 ஆந் திகதி அமைச்சு அங்கீகாரம் வழங்கியிருந்தது. எவ்வாறாயினும்,

அப்பேருந்துகளுக்காக பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| அனுமதிப்பத்திர இலக்கம் | அறவிடப்பட வேண்டிய நிர்வாக கட்டணங்கள் ரூபா |
|---|---|
| NTC 12665 | 705,000 |
| NTC 12743 | 1,006,750 |
| | 1,711,750 |

NTC 12743 ஆம் இலக்க அனுமதிப்பத்திரத்தையுடைய பேரூந்து மேற்படி நிர்வாகக் கட்டணங்களை அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டதன் பின்னர் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்ததாக கோவைகள் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.4 பொதுமக்கள் முறைப்பாடு

பொதுப் பேரூந்து சேவையை பயன்படுத்துகின்ற பயணிகளுக்கு உரிய சேவைகளை நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்களின் போதும் பயணிகளுக்கு இடம்பெறும் சிக்கல்களை குறிப்பிட்டு முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு இயலுமான வகையில் ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும் செயற்படும் துரித தொடர்பு வசதிகளுடன் முறைப்பாட்டு பிரிவொன்று நிறுவனத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் தொலைபேசி இலக்கம் 1955 ஆகும். மேலும், நேரடி தொலைபேசி இலக்கமான 011-2895555 இல் பயணிகளின் முறைப்பாடுகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மின்னஞ்சல் மற்றும் கடிதங்களின் மூலமும் பொதுமக்களுக்கு முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியுமாக இருந்தது. அதி சொகுசு, சொகுசு, அரைச் சொகுசு பேரூந்துகளின் ஆசனங்களுக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றுதல் தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாடு 2015 மற்றும் 2016 ஆம் ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் மார்ச் 31 ஆந் திகதி வரை கிடைத்துள்ள அளவுகள் முறையே 418, 393 மற்றும் 75 முறைப்பாடுகளாக இருந்தது. 2017 மார்ச் 31 ஆந் திகதி வரை கிடைத்திருந்த 75 முறைப்பாடுகளில் 35 முறைப்பாடுகள் அதாவது

47 அரைச்சொகுசு பேருந்துகள் தொடர்பாக இருந்ததுடன் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு சமமான பயணிகளை எடுத்துச் செல்ல வேண்டுமென அனுமதிப்பத்திர நிபந்தனை மீறியதன் பேரில் இம்முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. இவ்வாறு கிடைத்துள்ள 7 முறைப்பாடுகள் தொடர்பாக மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பாக எச்சரிக்கை விடுத்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்ததாக அவதானிக்கப்பட்டது. ஒரு தடவை எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தும் இரண்டு பேரூந்துகள் அத்தவறை மேற்கொண்டிருந்ததால் அவ்வாறு எச்சரிக்கை விடுப்பது போதியதல்ல என அவதானிக்கப்பட்டது.

**நிறுவகத்தின் கருத்துரை**

முறைப்பாடு செய்பவர்களின் 90 சதவீதமானோர் உரிய பரிசோதனைகளுக்கு சமூகமளிப்பது இல்லையெனவும் அநேகமான சந்தர்ப்பங்களில் விசாரணைக்காக அத்தியவசியமான நுழைவுச்சீட்டுக்களையும் பொதுமக்கள் முறைப்பாட்டு பிரிவிற்கு முன்வைக்கப்படுவதில்லையெனவும் முறைப்பாட்டாளர் சமூகமளிக்கும் புலனாய்வு நடவடிக்கைகளின் போது மாத்திரம் நிர்வாகக் கட்டணத்தை அறவிடுதல் அல்லது ஊழியர்களை மீண்டும் பயிற்சியளித்தலுக்காக தொடர்புபடுத்தல் உட்பட அவர்களின் முன்னுரிமை அட்டையை இடைநிறுத்துவது போன்ற ஒழுக்காற்று நடைமுறைகளுக்காக தொடர்புபடுத்துவதாகவும் அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் பேரூந்து உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுவித்தலுடன் மாத்திரம் முறைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

## 3.5 பொதுமக்கள் தனியார் போக்குவரத்து சேவைக்கு நுழைதல்

பயணிகளுக்கு செயற்திறனான போக்குவரத்து சேவையொன்றை ஏற்படுத்துவது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும், கிடைக்கும் முறைப்பாடுகள் புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் பேரூந்து ஓட்டுனர்கள் சாரதிகள் மற்றும் நடத்துனர்களில் பெரும்பாலானோர் பேரூந்து சேவைகளில் இருக்க வேண்டியப பண்புகள் மற்றும் தரம் தொடர்பாக கவனத்திற் கொள்ளாமையால் பொது மக்களுக்கு போதியளவு சேவையொன்று கிடைக்காத நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது. பொதுமக்கள் தனியார் போக்குவரத்து சேவையை நாடுவதற்கு இந்த நிலைமையும் காரணமொன்றாக இருந்தது. தனியார் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள அளவு ஒப்பீட்டு ரீதியில் அதிகரிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| வாகன வகை | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2010 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன அதிகரிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|---|
| தனியார் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் | | | | | | | |
| • மோட்டார் கார் | 410,282 | 468,168 | 499,714 | 528,094 | 566,874 | 672,502 | 64 |
| • முச்சக்கர வண்டி | 529,543 | 667,969 | 766,784 | 850,457 | 929,495 | 1,059,042 | 100 |
| • மோட்டார் சைக்கிள் | 2,100,832 | 2,354,163 | 2,546,447 | 2,715,727 | 2,988,612 | 3,359,501 | 60 |
| • இரட்டை நோக்கு வாகனங்கள் | 209,228 | 242,746 | 280,143 | 304,746 | 325,545 | 365,001 | 74 |
| பொதுப் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் பேருந்துகள் | 84,280 | 88,528 | 91,623 | 93,428 | 97,279 | 101,419 | 20 |
| மொத்தம் | **3,334,165** | **3,821,574** | **4,184,711** | **4,492,452** | **4,907,805** | **5,557,465** | 67 |

(மூலம் - தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை 2016)

மேற்குறித்த தரவுகளின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனங்களின் எண்ணிக்கை 67 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் பொதுப் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் பேரூந்துகள் 20 சதவீதமான அளவிலேயே அதிகரித்திருந்தன. அவ்வாறே இக்காலப்பகுதியில் மொத்த வாகன எண்ணிக்கையில் பேரூந்துகளின் எண்ணிக்கை 2 இற்கும் 3 இற்கும் இடைப்பட்ட சதவீத விலகல் காணப்பட்டது.

## 3.6 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை புறக்கணிக்கும் சந்தர்ப்பங்களில் நிர்வாகக் கட்டணங்களை அறவிடுதல்

1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் 1(ஈ) உப பிரிவின் பிரகாரம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமொன்றை கொண்டுள்ளவரால் அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த நிபந்தனைகளின் பிரகாரம் நிபந்தனைகளை புறக்கணித்துள்ளதாக ஆணைக்குழு திருப்தியடைந்ததால், ஆணைக்குழுவினால் அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யலாம். கீழே காட்டப்பட்டுள்ளவாறு அவ்வவ்போது மேற்கொள்ளும் முகாமைத்துவ தீர்மானங்களின் பிரகாரம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமொன்றை கொண்டுள்ளவரால் அந்த அனுமதிப்பத்திரத்தில் உள்ள நிபந்தனைகள் புறக்கணிக்கப்படும் போது அத்தவறின் தன்மை மற்றும் இடம்பெறும் தடவைகளின் எண்ணிக்கை அடிப்படையில் அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யவோ அல்லது இடைநிறுத்துவதற்கோ நிர்வாகக் கட்டணமொன்றை அறவிடுவதற்கோ அல்லது எச்சரிக்கை விடுப்பதற்கோ முடியும்.

| முகாமைத்துவ தீர்மானத்திற்குரிய இலக்கம் | செயற்படுத்தப்பட்ட திகதி |
|---|---|
| NTC/DG/02 (2002) | 2002/05/01 |
| தேபோஆ/டீஜீ /2007/01 | 2007/02/15 |
| - | 2009/08/10 |
| 53/2013 | 2013/06/04 |
| 2015/08/20 iii | 2015/08/20 |
| | 2016/08/01 |

2005 செப்தெம்பர் 13 ஆந் திகதிய ஈ/223/05 ஆம் இலக்க சட்டமா அதிபரின் கடிதத்தின் பிரகாரம் 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டத்தை மீறுதல் தொடர்பாக தண்டப்பணத்தை விதிப்பதற்கு அல்லது அறவிடுவதற்கு ஆணைக்குழுவிற்கு சட்டரீதியான அதிகாரமொன்று இல்லையென அவதானிக்கப்பட்டது.

## 3.7 சட்டங்கள், விதிகள் இலகுபடுத்தல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவரின் 2017 மே 16 ஆந் திகதி அனுப்பிய தே.போ.ஆ/ஓ/பொது/35 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அரைச் சொகுசு பேரூந்து சேவைக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய ஒரு பிரதான நிபந்தனையொன்றான ஆசனங்களில் இருந்து செல்லும் பயணிகளை கொண்டு செல்வதாகும். இங்கு இருந்து செல்லும் பயணிகளை கொண்டு செல்வதன் மூலம் பேரூந்து உரிமையாளர்களுக்கு ஏற்படக்கூடிய நட்டத்தை மேவுகை செய்யக்கூடிய வகையில் அவ்வாறு பயணிக்கும் பயணிகளிடமிருந்து சாதாரண பேரூந்து கட்டணத்தின் 1.5 மடங்கு அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்ததன் பிரகாரம் ஆசனங்களில் அமர்ந்து மாத்திரம் பயணிகளை கொண்டு செல்வதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி மீறப்படுவது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள 2015/8/20 iii ஆம் இலக்க முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் பிரதான தவறொன்றாக இருப்பதுடன் அதன் காரணமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அறவிடப்பட்ட நிர்வாகக் கட்டணங்கள் முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு சனவரி, பெப்ரவரி மாதங்களில் மாத்திரம் முறையே 4,214,375, ரூபா 2,463,750 மற்றும் ரூபா 59,100 ஆக இருந்தன. பேரூந்து உரிமையாளர்களின் வேண்டுகோளின் பிரகாரம் ஆண்டு தோறும் அறவிடப்படும் நிர்வாக கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ள முறை மற்றும் அரைச் சொகுசு பேரூந்து ஓட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரம் சாதாரண பேரூந்து அனுமதிப்பத்திரமாக மாற்றுதல் 2015 ஆம் ஆண்டின் போது தவறு மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது சந்தர்ப்பத்தின் செயற்படுத்தப்பட்ட போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது தவறு செய்த நான்காவது சந்தர்ப்பத்தில் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

| தவறு செய்த சந்தர்ப்பம் | 2015/8/20 iii ஆம் இலக்க முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் ஆசனங்களின் அளவினை கூடுதலாக பயணிகளை ஏற்றுவதால் அறவிடப்படும் நிர்வாகக் கட்டணங்கள் மற்றும் தண்டப் பணம் | |
|---|---|---|
| | (2015 ஆகஸ்ட் 20 முதல்) | (2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல்) |
| முதலாவது சந்தர்ப்பம் | i. நின்று செல்லும் ஒரு பிரயாணிக்கும் ரூபா 2,000 வீதம் | i. நின்று செல்லும் பிரயாணிகளின் அளவிற்கு சமமான நாட்களுக்கு அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்தல் |
| | ii. நடத்துனருக்கும் சாரதிக்கும் எச்சரிக்கை விடுத்தல் | ii. நின்று செல்லும் ஒரு பிரயாணிக்கும் 100 வீதம் நிர்வாகக் கட்டணம் அறவிடல் |
| இரண்டாவது சந்தர்ப்பம் | i. நின்று செல்லும் ஒரு பிரயாணிக்கும் ரூபா 4,000 வீதம் | i. ரூபா 250 வீதம் கூடுதலாக உள்ள பிரயாணிகளின் எண்ணிக்கைக்கு சமமாக நிர்வாகக் கட்டணங்களை அறவிடல் |
| | ii. நடத்துனருக்கும் சாரதிக்கும் பயிற்சியளித்தல் (20 நாட்கள்) | ii. கூடுதலாக நின்று பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையிலும் இரண்டு மடங்கிற்கு சமமான நாட்களால் வீதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| மூன்றாவது சந்தர்ப்பம் | i | NTC நிறுவனத்தினால் அரைச் சொகுசு பேரூந்து ஓட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ள வீதி அனுமதிப்பத்திரம், சாதாரண கட்டணத்தை அறவிடும் பேரூந்தாக மாற்றுதல் மற்றும் நடாத்துனர் மற்றும் சாரதி வேுஊ நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையை இரத்துச் செய்தல் | i. | கூடுதலாக நின்று பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையிலும் இரண்டு மடங்கிற்கு சமமான நாட்களுக்கு வீதி அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் |
| | | | ii | நின்று செல்லும் ஒரு பிரயாணியிடமிருந்து ரூபா 500 வீதம் நிர்வாகக் கட்டணங்களை அறவிடல் |
| நான்காவது சந்தர்ப்பம் | | | i. | பதவியணியினர் அனுமதிப் பத்திரத்தை கறுப்பு பட்டியலில் உட்படுத்தல் |
| | | | ii. | அரைச் சொகுசு பேரூந்து ஓட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை சாதாரண அனுமதிப்பத்திரமொன்றாக மாற்றல் |

### 3.8 G.P.S தொழில்நுட்பம் பேரூந்துகளை கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தல்

பேரூந்து சேவையின் சவால்கள் மிக்க பிரச்சினைகளை தீர்ப்பதினை அடிப்படையாகக் கொண்டு தரமானதும் பாதுகாப்புமிக்க போக்குவரத்து சேவையொன்றை ஸ்தாபிப்பதனை நோக்கமாகக் கொண்டு தரத்தை மேம்படுத்துவதற்கு இருக்கும் தகவல் அடிப்படையில் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்காக ஜீ.பி.எஸ் (GPS) தொழில்நுட்பம் மற்றும் ஏனைய தொழில்நுட்ப வீதிகள் இணைக்கப்பட்டு அனைத்து மாகாண பேரூந்து சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக இச்செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஓட்டத்தில் ஈடுபடும் பேரூந்துகளின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டு விபத்து தவிர்ப்பு சமிஞ்சையொன்று பேரூந்தினுள் ஒலிப்பதற்கு

ஏதுவாக இருந்தது. அதற்கு மேலதிகமாக பொதுமக்கள் முறைப்பாடு கிடைக்கும் சர்ந்தப்பத்தில் இருந்த முறைக்கு தொடர்புபட்ட பேரூந்து ஆயின் அச்சந்தர்ப்பத்திலேயே தொலைபேசி அழைப்பு விடுக்கப்படுவதன் மூலம் தவறான செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் தீர்வு வழங்குவதற்கும் இம்முறைமை ஊடாக முடியுமாக உள்ளது. நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 2017 மே 19 ஆந் திகதியில் உள்ளவாறு 440 பேரூந்துகள் இத்தொழில்நுட்பத்துடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. அதற்கிடையே 08 அரைச் சொகுசு பேரூந்துகளில் மாத்திரம் இந்த உபகரணம் பொருத்தப்பட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் தற்போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 448 அரைச் சொகுசு பேரூந்துகளில் 08 பேருந்துகள் மாத்திரம் இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது மாத்திரம் போதியதல்லதாக இருந்ததுடன் அரைச் சொகுசு பேரூந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்துவர் மேற்கொள்ளும் பிரதான தவறொன்றான ஆசனங்களின் எண்ணிக்கையை விட கூடுதலாக பயணிகள் ஏற்றுவதை கண்காணிப்பதற்கு இம் முறைமை மூலம் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லையென கண்டறியப்பட்டது.

### 3.9 பேரூந்துகளின் பௌதீக பரிசோதனை

(அ) 2017 ஆம் ஆண்டு மே மாதம் 2 மற்றும் 3 ஆந் திகதிகளில் தெரிவுப் பரிசோதனையின் போது 8 பேரூந்துகளில் 142 பேர் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பயணிகள் வகை | எண்ணிக்கை |
|---|---|
| - கட்டணங்கள் கூடுதலாக அறவிடப்படுவதாக தெரிந்து கொண்டு பேரூந்தில் ஏறுதல் | 88 |
| - கட்டணங்கள் கூடுதலாக அறவிடப்படுவதாக தெரியாமல் பேரூந்தில் ஏறுதல் | 51 |
| - சாதாரண அறவிடப்படும் பேரூந்துகள் வீதியில் இல்லாமையால் பேரூந்துகளில் ஏறுதல் | 45 |
| - கூடுதலான கட்டணங்களை செலுத்த விரும்பாத எண்ணிக்கை | 52 |
| - சாதாரண பேரூந்து ஒன்று நிறுத்தப்படும் வகையில் நிறுத்தி பயணிகளை ஏற்றுதல் | 52 |

(ஆ) மேற்குறித்த விடயங்களின் பிரகாரம் கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட 142 பயணிகளில், இச்சேவை பற்றி தெரியாமல் பேரூந்துகளில் ஏறிய மொத்த பயணிகள் 36 சதவீதமாக இருந்தது. பயணிகள் பேரூந்து சேவையின் ஆரம்ப சந்தர்ப்பத்தில் காணப்பட்ட காலப்பகுதியின் பயணிகள் சமூகத்திற்கு ஏதேனும் சலுகைகளை வழங்கும் நோக்கில் பேரூந்துகளில் காணப்படும் வசதிகளை அதிகரித்து அரைச் சொகுசு பேரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பிற்காலத்தில் சாதாரண பேரூந்து சேவையிலும் இந்த பேரூந்து சேவையிலும் உள்ள வசதிகள் ஒரே சமமான நிலைமையில் காணப்பட்டன.

(இ) சாதாரண பேரூந்து கட்டணத்தை அறவிடும் பேரூந்தில் ஆசனங்களை பொருத்தியுள்ள முறையின் பிரகாரம் பயணிகள் ஆசனங்கள் அளவை விட கூடுதலாக ஏற்றுதல் பயணிகளுக்கு இடையூறாக இல்லாத போதிலும் அரைச் சொகுசு பேரூந்தொன்றில் ஒரு வரிசையில் 5 ஆசனங்கள் (ஆசனங்கள் 2 + ஆசனங்கள் 3) என்ற வகையிலாகும். அதன் பிரகாரம் பேரூந்தில் பயணிகளுக்கு பிரயாணிக்க உள்ள இடவசதிகள் குறைவாக இருப்பதால் ஆசனத்தில் இருக்கும் பயணிகளை விட கூடுதலாக பயணிகளை ஏற்றும் போது அப்பயணிகளுக்கு இடையூறுகள் உட்பட ஆசனத்தில் அமர்ந்திருக்கும் பயணிகளுக்கும் கூடுதலான இடையூறுகள் இடம்பெறுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) அரைச் சொகுசு பேரூந்தொன்று செல்லும் வீதியில் நிறுத்தக்கூடிய பேரூந்து தரிப்பிடங்கள் எவையென தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அச்சட்டம் மீறப்பட்டு இடைக்கிடை பயணிகளை ஏற்றுதல் மற்றும் இறக்குதல் இடம்பெறுவது அவதானிக்கப்பட்டது. அவ்வாறு அனுமதிக்கப்பட்ட நிறுத்துமிடங்களுக்கு மேலதிகமான நிறுத்துமிடங்களில் நிறுத்தப்பட்டு பேரூந்துகளில் பயணிகளை ஏற்றுவதால் போன்ற மேலதிக நேரத்தை முகாமைத்துவப்படுத்த சந்தர்ப்பம் ஏற்படும் போது அதிக வேகத்துடன் ஓட்டத்தில் ஈடுபடுவது வீதிகளில் விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்களாக இருந்தன.

## 3.10 ஒன்றிணைணந்த கால அட்டவணையை தயாரித்தல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பேரூந்துகள் தொடர்பாக சில வீதிகளுக்காக ஒன்றிணைந்த நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு செயல்ரீதியாக நடைமுறைப்படுத்தாமையால் தனியார் துறையின் பேரூந்துகள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பேரூந்துகளுக்கு இடையே அதிக போட்டியொன்று காணப்படுவதுடன் அது இரு தரப்பினரதும் வருமானம் குறைவடைவதற்கும் பேரூந்துகள் விபத்துக்கள் அதிகரிப்பதற்கும் காரணங்களாக இருந்தன.

## 4. பரிந்துரை

i. 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்திற்கு மேற்கொண்ட மூலம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறுவோரிடமிருந்து ஆணைக்குழுவினால் அறவிடப்பட்ட கட்டணங்ள் அறவிடுவதை சட்ட ரீதியாக்குதல்.

ii. செல்லுபடியான பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் ஓட்டத்தில் ஈடுபடும் பேருந்துகளை இனங்கண்டு துரிதமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iii. உரிய புலனாய்விற்காக குறித்துரைக்கப்பட்ட திகதியில் சமூகமளிக்காத பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடாத்துனர்களுக்கு பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் தொடர்பாகவும் அவற்றை பின்பற்றுவது தொடர்பாகவும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தொடர்புபடுத்துதல் மற்றும் தாமதமாக நிர்வாகக் கட்டணத்தை கொடுப்பனவு செய்யும் போது தாமதமான நாட்களுக்காக தண்டப்பணமொன்று நிர்ணயித்தல்.

iv. பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறுவோரை அதைரியப்படுத்துவதற்கு விதத்தில் ஆணைக்குழுவினால் நிபந்தனைகளை மீறுவோரிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களை தீர்மானித்தல்.

v. அரைச் சொகுசு பேருந்துகள் ஒன்றிணைந்த நேர அட்டவணைகளுக்கு இணங்க ஓட்டத்தில் ஈடுபடுகின்றதா என முறையான கண்காணிப்பிற்கு உட்படுத்தல்.

vi. பொது மக்கள் முறைப்பாடுகள் அவ்வப்போது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு நிபந்தனைகளை மீறக் கூடிய ஆபத்துள்ள பேருந்துகள், வீதி இலக்கம் மற்றும் காலப்பகுதி இனங்காணப்பட்டு அவற்றிக்குக் கவனத்தை செலுத்தி நடமாடும் பரிசோதனை பிரிவின் வருடாந்த திட்டத்தை தயாரித்தல்.

vii. ஒரே தவறை பல தடவை மேற்கொண்ட அரைச் சொகுசு பேருந்துக்களின் பயணிகள் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு அறை சொகுசு பேருந்து சேவைக்காக வழங்கப்பட்டுள்ள பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை சாதாரண கட்டணங்களை அறவிடும் பேருந்து சேவைக்கு மாற்றுவதற்கு ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயற்படுத்துதல்.

viii. சகல அரைச் சொகுசு பேருந்துகள் GPS தொழில்நுட்ப மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறுத்துமிடங்களுக்கு மேலதிகமாக நிறுத்துமிடங்களில் நிறுத்தி பேருந்துக்கு பயணிகளை ஏற்றுதல், ஒன்றிணைந்த நேர அட்டவணைகளுக்கு இணங்க ஓட்டத்தில் ஈடுபடாமை, அதிக வேகத்துடன் ஓட்டத்தில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களை இனங்காணல்.

ix. இப் பேருந்து சேவையை மக்களுக்கு இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் பயண இடப்பதாகையில் அரைச் சொகுசு என பயணிகளுக்கு தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் குறிப்பிடுதல்.

## 5. தீர்மானம்

i. பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறும் சந்தர்ப்பத்தில் அவற்றின் தன்மை மற்றும் இடம் பெறும் தடவைகளின் அடிப்படையில் அனுமதிப்பத்திர உடமையாளரிடமிருந்து நிர்வாகக் கட்டணங்கள் அறவிடப்பட்ட போதிலும் அதற்காக ஏற்பாடுகள் காணப்படாததால் அவ்வாறான தண்டப்பணத்தை அறவிடுவதற்காக சட்டத்தில் திருத்தங்களை துரிதமாக மேற்கொள்வது அத்தியாவசியமானதென தீர்மானிக்கப்படுகின்றது.

ii. செல்லுபடியான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திரமொன்று இல்லாமல் தனியார் பேருந்துகள் அரை சொகுசு பேருந்து சேவையில் ஈடுபட்டிருந்ததாகவும் அவ்வாறான பேருந்துகளை இனங்கண்டு துரிதமான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென தீர்மானிக்கப்படுகின்றது.

iii. அரைச் சொகுசு பேருந்து மூலம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திர நிபந்தனைகளை மீறியுள்ள கூடுதலான சந்தர்ப்பங்களில் மற்றும் ஒரே தவறு மீண்டும் மீண்டும் பல தடவை செய்யப்படுவதாகவும் நடமாடும் பரிசோதனைகளின் மூலம் இனங்காணப்பட்டிருந்தமையால் குறித்த பரிசோதனைகளுக்கு உரிய தரப்பினரை அழைத்தும் அது தொடர்பாக கரிசணை காட்டாமல் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் போது மாத்திரம் வருகை தருவதால் அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் தொடர்பில் அவர்களின் கவனம் மிகவும் குறைவாக இருப்பதாகவும் தீர்மானிக்கப்படுகின்றது.

iv. அரை சொகுசு பேருந்து சேவையில் இருக்க வேண்டிய பண்புகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் இல்லையெனவும் அச் சேவை தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனை நடவடிக்கைகள் போதியளவில் இல்லையெனவும் உரிய சட்ட விதிகள் தொடர்பாகவும் உடமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடாத்துனர் ஆகியோர் தெரிந்து வைத்தருப்பதில் குறைபாடு இல்லாதாக தீர்மானிக்கப்பட்டது.

v. தற்போது பயன்படுத்தப்படும் பயண பதாகையில் பயணிகள் அரைச் சொகுசு பேருந்தென இலகுவாக இனங்காண முடியுமாக இருப்பதாலும் ஒன்றிணைந்த நேர அட்டவணைகளின் பிரகாரம் பேருந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தாமையால் பயணிகள் இன்னல்களுக்கு உள்ளாவதாக தீர்மானிக்கப்படுகின்றது.